செ.வெ.எண்:24 நாள்:11.10.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (11.10.2021) நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.10.2021) மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் பல்வேறு வகையான உதவித்தொகைகள், விலையில்லா தையல் எந்திரம், சலவைப் பெட்டி, மற்றும் சாலை வசதி, மின் இணைப்பு, வீட்டுமனைப் பட்டா மற்றும் பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்ட 203 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட தகுதியான மனுக்கள் மீது வரும் 3 நாட்களுக்குள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தகுதியில்லாத மனுக்கள் தொடர்ந்து வரும் பட்சத்தில் அந்த மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாராருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக தலா ரூ.14,170 மதிப்பில் என மொத்தம் ரூ.42,510 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களை 3 பயனாளிகளுக்கும்,தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (சமூக பாதுகாப்பு திட்டங்கள்) ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி கிராமத்தை சார்ந்த திருமதி.யசோதா என்பவருக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகை பெறுவதற்கான ஆணையும், ஊத்தங்கரை வட்டம், குருக்கம்பட்டி கிராமத்தை சார்ந்த திருமதி வசந்தா என்பவருக்கு சமூக பாதுகாப்பு திட்டம் - மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மாதாந்திர ஓய்வூதிய பெறுவதற்கான ஆணையையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்(பொது) திரு.பி.முருகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.பாக்கியலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு.ஜி.அமீர்பாஷா ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி.சாந்தி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**